# தினமலர் (01.12.2021)

# டிஎன்பிஎல் நிறுவனத்திற்கு விருது

வேலாயுதம்பாளையம், டிச.1-

டில்லியை சேர்ந்த கிரீன் டெக் பவுண்டேசன் ஆண்டு தோறும் பணியிடப்பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சிறந்த சமூக நலப்பணித்திட்டம் ஆகியவற்றின் கீழ் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களை தேர்வு செய்து விருது வழங்கி வருகிறது.

அதன்படி 2021ம் ஆண்டில் சமூக நலப்பணித்திட்டத்தின் கீழ் கல்வி மேம்பாடு, சுகாதார மேம்பாடு, முதியோர் நலன், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவித்தல், கரோனா வாரியர், விவசாய ஊக்குவிப்பு, கிராமப்புற மேம்பாடு போன்ற 10 பிரிவுகளின் கீழ் விருதுகள் அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் கரோனா வாரியர் என்ற பிரிவின் கீழ் டிஎன்பிஎல் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது.

பொதுமக்களுக்கு இலவச தடுப்பூசி செலுத்த நிதி வழங்கியது. ஓலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துடன் இணைந்து 70 முகாம்களை நடத்தி 9 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்களுக்கு கரோனா தடுப்பூசி போட்டது போன்றவற்றை கிரீன் டெக் பவுண்டேசனின் நடுவர் குழு ஆய்வு செய்து டிஎன்பிஎல் நிறுவனத்தை 8வது சிஎஸ்ஆர் இந்தியா அவார்டு விருதுக்கு தேர்வு செய்தது.

அதையடுத்து மகாபலிபுரத்தில் நடந்த விருது வழங்கும் விழாவில் டிஎன்பிஎல் நிறுவனம் சார்பாக பொதுமேலாளர்(சிடிசி) அறிவுடைநம்பி, மேலாளர் (மனிதவளம்)சிவக்குமார் ஆகியோர் கிரீன் டெக் பவுண்டேசன் அமைப்பிடம் இருந்து விருது மற்றும் சான்றிதழை பெற்றுக்கொண்டனர்.




மகாபலிபுரத்தில் நடந்த விருது வழங்கும் விழாவில் டில்லி கிரீன் டெக் பவுண்டேசன் சார்பில் வழங்கப்பட்ட விருது மற்றும் சான்றிதழை டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில் பொதுமேலாளர் அறிவுடைநம்பி, மேலாளர் சிவக்குமார் ஆகியோர் பெற்றனர்.

மாலை மலர் (01.12.2021)




டெல்லி கிரீன் டெக் பவுண்டேஷன் சார்பில் வழங்கப்பட்ட விருது மற்றும் சான்றிதழை டி.என்.பி.எல். நிறுவனம் சார்பில் பொது மேலாளர் அறிவுடைநம்பி, மேலாளர் சிவக்குமார் ஆகியோர் பெற்றுக்கொண்ட போது எடுத்த படம்.

# கரூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு கிரீன் டெக் விருது

கரூர், டிச.1–

டெல்லியை சேர்ந்த கிரீன் டெக் பவுண்டேஷன் ஆண்டுதோறும் பணியிட பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சிறந்த சமூக நலப்பணி திட்டம் ஆகியவற்றின் கீழ் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களை தேர்வு செய்து விருது வழங்கி வருகிறது.

அதன்படி 2021–ம் ஆண்டில் சமூக நலப்பணித் திட்டத்தின் கீழ் கல்வி மேம்பாடு, சுகாதார மேம் பாடு, முதியோர் நலன், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவித்தல், கொரோனோ வாரி யர், விவசாய ஊக்குவிப்பு, கிராமப்புற மேம் பாடு போன்ற 10 பிரிவுக ளின் கீழ் விருதுகள் அறிவிக்கப் பட்டிருந்தது. இதில் கொரோனா வாரியர் என்ற பிரிவின் கீழ் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தேர்வு செய்யப் பட்டது. பொதுமக்க ளுக்கு இலவச தடுப்பூசி செலுத்த நிதி வழங்கியது, ஓலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துடன் இணைந்து 70 முகாம்களை நடத்தி 9 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தியது போன்றவற்றை, கிரீன் டெக் பவுண்டேஷன் நடுவர் குழு ஆய்வு செய்து, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தை 8–வது சிஎஸ்ஆர் இந்திய அவார்டு விருதுக்கு தேர்வு செய்தது.

இதையடுத்து மகாபலிபுரத்தில் நடந்த விருது வழங்கும் விழாவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பாக பொது மேலாளர் (சிடிசி) அறிவுடைநம்பி, மேலாளர் (மனிதவளம்) சிவகுமார் ஆகியோர் க்ரீன் டெக் பவுண்டேசன் அமைப்பிடம் இருந்து விருது மற்றும் சான்றிதழ்களை பெற்றுக் கொண்டனர்.

**காலைக்கதிர் (02.12.2021)**

# டி.என்.பி.எல்., நிறுவனத்திற்கு கொரோனா வாரியர் விருது

**கரூர், டிச. 2–**

கரூர் டி.என்.பி.எல்., நிறுவனத்திற்கு கொரோனா வாரியர் விருது வழங்கப்பட்டுள்ளது.

டெல்லி கிரீன்டெக் பவுண்டேஷன் சார்பில் ஆண்டுதோறும் பணியிட பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சிறந்த சமூக நலப் பணித் திட்டம் ஆகியவற்றின் கீழ் சிறந்து விளங்கும் நிறுவனங்களை தேர்வு செய்து விருதுகள் வழங்கப்படுகிறது. 2021ல் சமூக நலப்பணித்திட்டத்தின் கீழ் கல்வி மேம்பாடு, சுகாதார மேம்பாடு, முதியோர் நலன், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவித்தல், கொரோனா வாரியர், விவசாய ஊக்குவிப்பு, கிராமப்புற மேம்பாடு போன்ற, 10 பிரிவுகளின் கீழ் விருதுகள் அறிவிக்கப்பட்டு இருந்தது.

இதில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் ஒரு பகுதியாக, பொதுமக்களுக்கு இலவச முக கவசங்கள், கபசுர குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமுதாயக்கூடமானது, 200 படுக்கைகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையமாக உருவாக்கப்பட்டது. அதில், 152 படுக்கைகள் ஆக்சிஜன் வசதிகள் கொண்டவை. இந்த மையத்திற்குத் தேவையான வசதிகள் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டன. மேலும், ஆக்சிஜன் உற்பத்தி செய்யப்பட்டு தனிக் குழாய்கள் அமைத்து தடையின்றி வழங்கப்பட்டு வந்தது.

இதுபோன்ற தடுப்பு பணிகளுக்கு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு கொரோனா வாரியர் பிரிவில் விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதை சென்னையில் நடந்த விழாவில் பொதுமேலாளர் அறிவுடை நம்பி பெற்று கொண்டார்.